**ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட் - 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹோட்டல் டெவலப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குளசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பொது முயற்சிகள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் பிரிவு 6.7 | வருடாந்த சொத்து மெய்மையாய்வு கம்பனியினால் மேற்கொள்ளப்பட வில்லை. | அகற்றல் செய்யப்பட்ட மற்றும் வைத்திருக்க வேண்டிய பொருட்களைத் தனித்தனியாகக் கண்டறிந்து, பொது ஏல விற்பனைக்கு செல்லவும் மற்றும் ஏலச் செயல்முறை மற்றும் கணக்கீட்டுக்கான மதிப்பீட்டை நிர்ணயம் செய்வதற்காகவும் புணரமைப்பு செய்யப்பட்ட அடுக்குமாடிகளின் சொத்து மெய்மையாய்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. எனவே, முழுமையான சொத்து புணரமைப்பு முடியும் வரையிலும், முழுமையான சொத்து மெய்மையாய்வினை இறுதி செய்வது ஒத்திவைக்கப்பட்டது. | பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 688,713,000 தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 885,122,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா 196,409,000 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் அதிகரித்தமை இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவீன விடயங்களின் பகுப்பாய்வு

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | முன்னேற்றம் / பின்னடைவு 2019-2023 | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs.000 | Rs.000 | Rs.000 | Rs.000 | Rs.000 | Rs.000 | % |
| வருமானம் | 4,228,100 | 2,887,267 | 1,178,381 | 1,081,135 | 2,878,752 | 1,349,348 | 46.87 |
| மொத்த இலாபம் | 1,782,482 | 1,061,770 | 255,686 | 270,043 | 1,475,059 | 307,423 | 20.84 |
| நிர்வாக மற்றும் விற்பனை விநியோக செலவீனங்கள் | 1,015,817 | 855,959 | 585,498 | 591,036 | 910,514 | 105,303 | 11.57 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்கள் | 983,698 | 673,824 | 554,539 | 550,046 | 797,207 | 186,491 | 23.39 |
| தேறிய நிதி வருமானம் | (580,509) | (371,340) | (123,255) | (31,696) | (39,370) | (541,139) | (1374.5) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | (688,713) | (885,123) | (957,225) | (918,107) | (325,630) | (363,083) | (111.5) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதங்கள் | | 2023 | 2022 |
|---|---|---|---|
| மொத்தலாப விகிதம் | (%) | 42 | 37 |
| தேறியலாப / (நட்ட) விகிதம் | (%) | (19) | (22) |
| நடைமுறை விகிதம் | | 0.31 | 0.64 |
| விரைவு விகிதம் | | 0.23 | 0.28 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் | | (0.02) | (0.02) |
| வட்டிக் காப்பு விகிதம் | | (0.31) | (0.62) |

## 3. செயற்பாட்டு மீளாய்

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே மிகவும் குறைவாக 0.31 மற்றும் 0.23 ஆக காணப்பட்டது மற்றும் விகிதம் ஒன்று (01) இற்கு குறைவாக காணப்படுவதன் பிரகாரம், அதன் குறுகிய கால பொறுப்புகளைத் தீர்க்கும் திறன் மிகவும் மோசமாக காணப்படுவதனால் நிறுவனம் நிதி நெருக்கடியில் உள்ளது. மேலும், எதிர்மறையான நிகர இலாப எல்லையுடன் அதன் வட்டி காப்பு விகிதம் எதிர்மறையாக மாறியதால், நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்களைத் தீர்க்கும் நிறுவனத்தின் திறன் வலுவாக காணப்படாது. இதற்கு மேலதிகமாக, கடந்த ஆண்டுகளில் ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் விகிதம் எதிர்மறை பெறுமதியினை பெற்றதால், நிறுவனம் அதன் உரிமையாளர்களை போதுமான திரும்பலுடன் திருப்திப்படுத்தத் தவறியிருந்தது. | கடந்த 04 வருடங்கள் விருந்தோம்பல் துறைக்கு மிகவும் சவாலானதாக இருந்தது, ஏனெனில் உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தொழில்துறையின் செயல்திறனை எதிர்மறையாக பாதித்தன. மேலும், 2021 முதல் 2023 ஆகஸ்ட் காலப்பகுதிக்கிடையே உணவகம் புதுப்பிக்கப்பட்டமை காரணமாக 153 பழைய அறைகளுடன் பகுதியளவில் செயல்பட்டது. எனவே, குறைந்த தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்கு நிதியளிப்பதற்கு வங்கி மேலதிக பற்று வசதியைப் பயன்படுத்தியதன் விளைவாக நடைமுறை விகிதம் 2020 மற்றும் 2023 க்கு இடையில் குறைவடைந்துள்ளது.<br><br>மேலும், குறைந்த நடைமுறை விகிதங்கள் விருந்தோம்பல் துறையில் உள்ள ஏனைய உணவகங்களுக்கு பொதுவானவை.<br><br>2022 மற்றும் 2023 ஆம் ஆண்டின் இன் செயல்திறனை அடிப்படையாகக் கொண்ட வட்டி காப்பு விகிதமானது, தொழில்துறை அளவிலான வரையறைகளுடன் தடைசெய்யப்பட்ட உணவக செயல்பாடுகள் மற்றும் புதுப்பித்தல் திட்டத்தின் காரணமாக மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. தொழில்துறையின் உள்ளார்ந்த வரையறைகள் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் எதிர்மறையான ROCE தவிர்க்க முடியாததாக காணப்பட்டது. | நிதி முகாமைத்துவ சிக்கல்களைச் சமாளிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கார் தரிப்பிடத்திற்கான உணவகத்துக்கு முன்னால் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (UDA) இற்கு சொந்தமான 52 பேர்ச் காணியின் உண்மையான பயன்பாடு 2016 ஆம் ஆண்டு முதல் கம்பனியிடம் காணப்பட்டிருந்த போதிலும், குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படாமலேயே ரூபா. 40 மில்லியன் தொகையான வாடகை கொடுப்பனவொன்று செய்யப்பட்டிருந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது. வரைவு குத்தகை ஒப்பந்தத்தில் கம்பனியின் வழக்கறிஞர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட திருத்தங்களை UDA-இற்கு தொடர்பாடல் செய்துள்ளோம். தற்போது UDA இல் இருந்து இறுதி செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தத்திற்காக காத்திருக்கின்றோம். | ஒப்பந்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 மூலதன வேலை மற்றும் செயற்திட்டங்களின் கால தாமதம்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| புனரமைப்புக்கான செயற்திட்டத்திற்கான திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்த பொதிலும் ஆரம்பத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் அண்ணவாக ஐந்து மாதங்கள் தாமதமாக திருத்தப்பட்ட இலக்குகள் அடையப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அசல் புனரமைப்புத் திட்டத்திற்காக கருத்தில் கொள்ளப்பட்ட 11 தளங்களை பாதிக்காமல் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது மற்றும் நோக்கெல்லையின் மீது எவ்வித மாற்றமும் தாக்கமும் இல்லாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | காலதாமதங்களைக் குறைக்கவும், ஒவ்வொரு அறைகளினையும் விற்பனை இருப்பாக எடுத்துச் கொள்வதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 ெ
பறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பகுதி-விரிப்புகளின் பெறுகைக்கான ஒப்பந்தம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தை மேற்கொள்ள இயலாமை பற்றி ஒப்பந்ததார் தெரிவித்திருந்த போதிலும், அரச பெறுகை வழிகாட்டுதல்களின் பந்தி 8.11.4 இன் பிரகாரம், கம்பனி செயல்பட்டிரக்கவில்லை. | விலை மனு நிபந்தனைகளுக்கு இணங்காமைக்கும் வழங்குனர் மாற்றத்துக்கும் விளக்கம் கோரி மின்னஞ்சல் மூலம் ஒரு காரண கடிதம் அனுப்பப்பட்டது. விநியோக நாட்களில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் விலை அதிகரிப்பு என்பன அவற்றின் வழங்குனரால் கோரப்பட்டமையினால் அவற்றின் பிடித்து வைத்தல் பணத்தினை வைத்திருப்பதற்கான காரணத்தினை நியாயப்படுத்தாத விளக்கமொன்று வழங்கப்பட்டது மற்றும் முன்மொழியப்பட்ட புதிய வழங்குனரால் கம்பனிக்கு எந்த கிரய நன்மையும் வழங்கப்படவில்லை அல்லது மாதிரி அங்கீகார செயல்முறை ஊடாகவும் செல்லவில்லை. எவ்வாறாயினும், தடுப்புப்பட்டியலின் செயல்முறை பரிசீலிக்கப்படவில்லை அல்லது மேற்படி ஒப்பந்தக்காரருக்கு மேலும் விலைமனுக்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |